விரும்புகின்றேன். அதைப் பரிசீலனை செய்தாவது குடிநீர்த் திட்டங்கள் பாதிக்கப்படாமல்—அந்தப் பகுதிகளை வைத்துத் தான் கல்பாக்கத்திற்கும், திருக்கழுக்குன்றத்திற்கும், பூதூரிலிருந்து அச்சரப்பாக்கம், மேல்மருவத்தூர், மதுராந்தகம் போன்ற கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்குத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதைக் கருத்தில் கொண்டு அரசு அதைத் தடை செய்யுமா? அந்தப் பகுதியில் மணல் எடுப்பதையே தடை செய்யுமா, ரத்து செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுவாகவே, மணல் எடுப்பதை எப்படி ஒரு வரைமுறைப்படுத்தலாம் என்று இந்த அரசு யோசித்துக் கொண்டு, சில சட்டங்களைக் கொண்டு வர இருக்கிறது. அந்தச் சட்டத்திற்குள் இந்தக் குறிப்பிட்ட இடத்தையும் அடக்க அரசு முயற்சி செய்யும்.

2. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி ஆறு முதல் இருபத்தொன்பது வரையிலான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

3. இறுதித் துணை நிதி நிலை அறிக்கை, 1989-90—அளித்தல்.

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1989–90ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 654.01 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ. 959.45 கோடி மூலதனக் கணக்கிலும் வருகின்றது.

2. இப்பொழுது வைக்கப்பட்டுள்ள இந்த இறுதித் துணை மதிப்பீடுகளில் கோரப்பட்டுள்ள மொத்தத் தொகையில் ரூ. 815.09 கோடி, நடப்பாண்டில் இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்பட்ட வழிவகை முன்பணங்கள் மற்றும் மிகைப்பற்றுகளைத் திருப்பிக் கொடுக்கத் தேவைப்படுகிறது. இந்த மானியக் கோரிக்கை அனுமதிக்கப்படுவதால், தேவைக்கேற்ப இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து வழிவகை முன்பணம் மற்றும் மிகைப் பற்றுக்கள் பெற ஏதுவாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

1990 மார்ச் 28] [டாக்டர் மு. கருணாநிதி]

3. இந்தத் துணை மதிப்பீட்டில் கோரப்பட்டுள்ள முக்கியமான சில ஒதுக்கீடுகள் கீழே சுருக்கமாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

4. ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப் படையில் வழங்கப்பட்ட புதிய சம்பள விகிதங்களுக்கு ஏற்படும் செலவுக்காக மானியக் கோரிக்கை எண் 43-ல் அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த அவையின் ஒப்புதல் முதல் துணை மதிப்பீடுகளில் பெறப்பட்டிருந்தது. தற்போது இறுதித் துணை மதிப்பீடுகளில் ஒவ்வொரு மானியத்திற்கும் அதற்குத் தேவையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

5. மானியக் கோரிக்கை எண் 14-ல் சிறைச்சாலைகளில் சிறப்பு மருத்துவ வசதிகள் ஏற்படுத்துவதற்கு ரூ. 1.36 கோடி திட்டம் ஒன்று அனுமதிக்கப்பட்டு, அதற்கென ரூ. 5.08 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

6. விவசாயிகளுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35 ஊக்கத் தொகையாக வழங்குவதற்கு மானியக் கோரிக்கை எண் 20. வேளாண்மையின் கீழ் கூடுதலாக ரூ. 15 கோடி கோரப்பட் டுள்ளது. நெற்பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் எண்ணத்துடன், சான்றிதழ் பெற்ற விதைகளை வழங்குவதற்கு என கூடுதலாக ரூ. 2.49 கோடி இதே மானியத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், பூச்சிக் கொல்லி மருந்துகள் வழங்கும் திட்டத்தின் கீழ் கூடுதலாக ரூ. 2.26 கோடி வழங்கப்பட்டுள்ளது. புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ— அறிவியல் பல்கலைக் கழகத்திற்கென ரூ. 1.25 கோடி கோரப் பட்டுள்ளது.

7. கைத்தறி வளர்ச்சிக்கென வழங்கப்படும் தள்ளுபடித் தொகையை முழுமையாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இதற்கென ரூபாய் 26.38 கோடி இவ்வாண்டு ஏற் கெனவே வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1988–89 ஆம் ஆண்டிற்கான தள்ளுபடித் தொகையை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முழுமையாக வழங்குவதற்குக் கூடுதலாக ரூ. 20.65 கோடி நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் ஏழை எளியவர்களுக்கு இலவச சேலைகள், வேட்டிகள் வழங்குவதற்காக கூடுதலாக ரூ. 12.38 கோடி வழங்கப்பட்டது.

8. பொது விநியோக முறையைப் பராமரிப்பதற்காக தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வரவு-செலவுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த ரூ. 113 கோடிக்கு மேல் ரூ. 87 கோடி கோரிக்கை எண் 35-ல் கோரப்பட்டுள்ளது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மார்ச் 28

9. வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, ராணிப் பேட்டை, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுகளைச் சுத்திகரிப்பதற்காக தமிழ்நாடு தோல் பொருள் வளர்ச்சிக் கழகத்திற்கு, அரசு. ரூ. 3.69 கோடி அனுமதித்துள்ளது. தொழில் மற்றும் வணிக இயக்ககத்தின் மூலம் வட்டி இல்லா விற்பனை வரி சலுகைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக கூடுதலாக ரூ. 2 கோடி, கோரிக்கை எண் 59-ன்கீழ் கோரப் பட்டுள்ளது.

10. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் தெலுங்கு கங்கைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ஆந்திர மாநில அரசுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்திருந்த ரூ. 30 கோடிக்கு மேல் ரூ. 15 கோடி சேர்த்து, அரசு, ரூ. 45 கோடி வழங்கியுள்ளது.

11. நீலகிரி மாவட்டத்திலும், மற்றும் இராமநாதபுரம், காமராஜர், மதுரை, திண்டுக்கல்-காயிதே மில்லத், சிதம்பர னார், நெல்லை கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களிலும் வெள்ளத்தினால் கடும் பாதிப்பு ஏற்பட்டது. வெள்ள நிவார ணப் பணிகளுக்காக ரூ. 2.39 கோடி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

12. சென்னையில் தொடர்ந்து குடிநீர்ப் பற்றாக்குறை நீடித்து வருவதால் லாரிகளின் மூலம் குடிநீர் வழங்குவதற்காக சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு ரூ. 1.36 கோடி வழங்கப்பட்டது.

13. தமிழ்நாடு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 30 ஆயிரம் வீடுகள் அனுமதிக்கப்பட்டு அவற்றைக் கட்டி முடிப்பதற்காக மானியமாக ரூ. 4.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்கள் வீடு கட்டுவதற்கான முன்பணத் தேவைகளைக் கருத்தில் கொண்டு கூடுதலாக ரூ. 5.19 கோடி நிதி ஒதுக்கம், கோரிக்கை எண் 59-ல் செய்யப்பட்டுள்ளது.

14. பல்வேறு கோரிக்கையின்கீழ் தேவைப்படக் கூடிய கூடுதல் நிதி ஒதுக்கம் குறித்த விவரங்கள் அவையில் வைக்கப் பட்டுள்ளன. இதில் கோரப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளித்து, அரசுக்குத் தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்க வேண்டுமென இந்த அவையை வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS